00017

(முழுப்பதிப்புரிமை உடையது)

**இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்**

இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை 2013(1)

**அரசியலமைப்புச் சட்டமும் நிருவாகச் சட்டமும் (01)**

**3 மணித்தியாலங்கள்**

**5 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**
**அனைத்து வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.**

---

1. சோல்பரி அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் இந் நாட்டில் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் பிரதானமான பண்புகளை கலந்துரையாடுக.

(20 புள்ளிகள்)

2. வலு வேறாக்கக் கொள்கை தற்போதைய அரசியல் சட்டத்தின் மூலம் எவ்வளவு தூரம் அர்த்தமுள்ள வகையில் உள்வாங்கப்பட்டுள்ளது என்பதை சென்ற 35 வருடங்களில் அது நடைமுறைப்படுத்தப்பட்ட முறையினை கருத்திற் கொண்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

3. "தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தில் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் அவர்களால் அனுபவிக்கப்படுவது நடைமுறைப்படுத்தப்படுவது சில வரையறைகளின் கீழாகும்" பரீட்சிக்குக.

(20 புள்ளிகள்)

4. (அ) பரவலாக்கப்பட்ட சட்டவாக்கம் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் பரவலாக்கப்பட்ட அரசியலமைப்பு எனக் கருதப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

(இ) பரவலாக்கப்பட்ட அரசியலமைப்பின் அவசியம் என்ன காரணங்களினால் ஏற்படுகிறது?

(10 புள்ளிகள்)

5. இலங்கையின் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினைக் கலந்துரையாடுக.

(20 புள்ளிகள்)

6. அரச உத்தியோகத்தர்களினால் அதிகார எல்லை மீறல் (ultra vinous) ஏற்படும் முறையினை உதாரணத்துடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

7. அரசியலமைப்பின் 17ஆவது திருத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட தாக்கத்திற்கு கூடிய கவனம் செலுத்தி 18ஆவது திருத்தச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பிரதான மாற்றங்களைப் பரீட்சிக்குக.

(20 புள்ளிகள்)

8. நபர் ஒருவருக்கு நியாயமான முறையில் காது கொடுக்கும் உரிமை (Right of fair hearing) பற்றிய நிருவாகச் சட்ட சித்தாந்தத்தினை விரிவாக விளக்குக.

(20 புள்ளிகள்)

************